


Metro லீடர்
மெட்ரோ
LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 05 இதழ்: 292 15.03.2025 பக்கங்கள்:09 editorml21@gmail.com விலை:75/-

# கொலை கலாசாரத்தை நாட்டில் இருந்து துடைத்தெறியுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தூண்களில் ஒன்றான பொலிஸ் துறையும், நீதித்துறையும் இன்று ஆபத்தான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளன. சந்தேக நபர்களை நீதிமன்ற அறையில் கொலை செய்கின்றனர். நீதிமன்றம் மற்றும் நீதிபதிகள் மீது காணப்படும் அச்சம் பயம் மரியாதை முற்றாக இல்லாது போயுள்ளன. நீதிமன்ற அறையில் துப்பாக்கிச் சூடு நடத்தும்போது நீதிபதிகளுக்கு ஏற்படும் அதிர்ச்சியை சொல்லி முடிக்க முடியாது. இனியும் இவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்பதற்கு அரசாங்கம் என்ன உத்தரவாதத்தை நாட்டுக்கும் மக்களுக்கும் நீதிபதிகளுக்கும் வழங்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.

02 ⏭

# மாணவர்களுக்கு வழங்கப்படும் 6,000 ரூபா வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு



பாடசாலை மாணவர்களுக்கு உபகரணம் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள 6000 ரூபா வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இன்று (15) காலாவதியாகவிருந்த குறித்த வவுச்சரின் செல்லுபடியாகும் காலம் மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# மூதூரில் இருவர் வெட்டிக் கொலை 15 வயது சிறுமி கைது!

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் இருவர் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று (14) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மூதூர் தாஹா நகர் பகுதியில்

02 ⏭

# அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும்

**கவிந்திரன் கோடீஸ்வரன்**



02 ⏭

# மு.கா பாராளுமன்ற உறுப்பினர் இராஜினாமா!

(கே.ஏ. ஹமீட் )



ஏறாவூர் நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை எம்.எஸ். நளீம் இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

நேற்றைய (14) பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய பின்னர் தனது ராஜினாமா கடிதத்தை பாராளுமன்றத்தின் செயலாளரிடம் கையளித்தார்.

இதன் போது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் , நிசாம் காரியப்பர். எம் எஸ் உதுமாலெப்பை ஆகியோர் கலந்து கொண்டனர்

## கொலை கலாசாரத்தை...

நாட்டில் சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நேற்று (14) பாராளுமன்றத்தில் விஷேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தருணத்திலும் கூட நீதிமன்றத்தில் கொலையை திட்டமிட்ட பெண்ணும், முன்னால் பொலிஸ் மா அதிபரும் நீதிமன்ற பிடியாணையில் இருந்து தப்பிக்க தலைமறைவாகியுள்ளனர்.

பொலிஸாரால் கூட முன்னாள் பொலிஸ்மா அதிபரைக் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளது. ஒட்டுமொத்த நாட்டின் பொது மக்கள் பாதுகாப்பும் சீர்குலைந்துள்ளது. நேற்று முந்தினம் (13) பூஸ்ஸ சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். கம்பஹா வெலிவேரிய பகுதிகளில் பல துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன. அகுனுகொலபலஸ்ஸ பகுதியில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். மீகஹகிவுல, தல்தென, மூதூர் போன்ற பிரதேசங்களிலும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபரைக் கூட கைது செய்ய முடியாமல் போயிருக்கிறது. சட்டத்தின் ஆட்சி குறித்து பேசி என்ன பயன்? ஓய்வு பெற்ற பிறகும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுக்கப்படுகின்றன. இது இவ்வாறு தொடர்ந்தால் இவர்கள் எவ்வாறு தமது அரச பணியை முன்னெடுப்பது. இங்கு பிரச்சினை காணப்படுகின்றது. இந்த கொலை செய்யும் கலாச்சாரத்தை நிறுத்த தேசிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு எதிர்க்கட்சியினர் ஒட்டுமொத்த ஆதரவையும் நல்குவர். முன்னாள் பொலிஸ் மா அதிபரை கண்டுபிடிக்க முடியாவிட்டால் சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு கோலோச்சுவது?

எனவே இதனை வேடிக்கையாக எடுத்துக் கொள்ளாமல் தீர்வுகளை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் தேசிய பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்க சபை அமர்வுகள் ஆரம்பிக்கும் நேரத்தில், பாராளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருந்த வாய்ப்பை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகிறது. ஆகையால் தான் வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்திக்கு மத்தியில் இவ்வாறு இந்த விடயத்தை சபையில் முன்வைக்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

## மூதூரில் இருவர்..

சிறிதரன் தர்ஷினி என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது கணவர் வெளிநாட்டில் வசித்து வருபவர் எனவும் சிறிதரன் ராஜேஸ்வரி (68 வயது) மற்றும் அவரது பெரியம்மாவான சக்திவேல் ராஜகுமாரி (74 வயது) ஆகிய இருவர் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் உயிரிழந்த சிறிதரன் ராஜேஸ்வரி என்பவரின் 15 வயது மகள் வெட்டு காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இச்சிறுமி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அம்பாறை மாவட்டத்தில்.........

(லோ.கஜரூபன் )

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் தங்களது அடையாளத்தை பாதுகாப்பதற்காக இந்த முறை தமிழரசுக் கட்சியை அமோக வெற்றியீட்டச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்திலே ஆறு பிரதேச சபைகளுக்கான கட்டுப் பணத்தை நேற்று (14 ) செலுத்தியது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் மேலும் குறிப்பிடும் போது,

வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலே சிறந்த நபர்களை தமிழரசுக் கட்சி களமிறக்கி இருக்கின்றது. அனைத்து நபர்களும், அனைத்து சபைகளும் பூரணமான ஒரு வெற்றியைப் பெற்று அம்பாறை மாவட்டத்திலே தமிழரின் இருப்பை பாதுகாக்கும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் இருக்கின்றது.

அந்த வகையிலே பொத்துவில் பிரதேச சபை, திருக்கோவில் பிரதேச சபை, ஆலையடிவேம்பு பிரதேச சபை, காரைதீவு பிரதேச சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை என்கின்ற 4 பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணத்தை செலுத்தி இருக்கின்றார்கள்.

அந்த வகையிலே களம் இறக்கப்பட்ட அனைவரும் மிகச் சிறந்தவர்களாகவும், மக்கள் நலன் கொண்டு செயற்படுகின்றவர்களாகவும், மக்கள் சேவைகளை கருத்தில் கொண்டு செயற்படுகின்றவர்களாகவும், அது மட்டுமல்ல தமிழோடும் தேசியத்தோடும் பயணிக்கிறவர்களைத்தான் நாங்கள் இந்த முறை எங்களது பிரதேச சபைகளிலே களம் இறக்கி இருக்கின்றோம், அந்த வகையிலே, வருகின்ற பிரதேச சபையிலே, அனைத்து சபைகளையும் தமிழரசுக் கட்சியானது கைப்பற்றும் என்பது 100% அது நிச்சயமாக அது வெளிக்காட்டப்படும் என்றார்.

## வேட்புமனு தாக்கலின் பின்பு ஊர்வலம், வாகனப் பேரணி நடத்த அனுமதியில்லை

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பணிகள் மார்ச் 17 ஆம் திகதி காலை 8 மணி முதல் தெரிவத்தாட்சி அலுவலகங்களில் ஆரம்பமாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையும் நடைபெறும் என்பதால், வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் அனைத்து வேட்பாளர்களும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று (14) பிற்பகல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், எந்தவொரு வேட்பாளரும் இதுபோன்ற இடையூறு விளைவிக்கும் வகையில் செயல்பட்டால் சட்டத்தை கடுமையாக அமல்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மார்ச் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குப் பிறகு வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் நிறைவடையும் என்றும், வேட்புமனு தாக்கலின் பின்னர் எந்தவொரு அணிவகுப்பு, வாகனப் பேரணி அல்லது ஒன்றுகூடல் நடத்த அனுமதி இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று (14) ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வின் போது....

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## நாட்டில் அதிகரித்து வரும் வன்முறைகள்

எமது நாட்டில் அண்மைக்காலமாக பல கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது. அந்த வகையில் வாள்வெட்டுக் கும்பல் தொடர்பான கொலைகள், படுகொலைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவை எட்டியுள்ளன.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் குறைந்தது 13 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர், இது நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் நாட்டில் தொடரும் கொலைகளுக்காக ஆளும்தரப்பை எதிர்கட்சியினர் கண்டித்து வருகின்றனர். இதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறும் விலியுறுத்தி வந்திருக்கிறார். ஆனால், இந்தக் கொலைகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்று கூறிக்கொண்டு கொலைகளைக் கட்டுப்படுத்த ஆளும்தரப்பு அக்கறை காட்டவில்லை என்பது நேற்றுவரையில் தொடரும் கொலைகளில் இருந்து நிரூபணமாகின்றது.

நாட்டில் அதிகரித்துவரும் வன்முறை அலையைத் தடுக்க அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். குற்றவியல் வலையமைப்புகளை அகற்ற காவல்துறையினர் சிறந்த வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியுடன் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

இப்போது மக்களுக்கு தேவைப்படுவது பாதுகாப்பை மீட்டெடுக்கும், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தப்படும் சிறந்த ஆட்சியாகும்.

editorml21@gmail.com

# போர்நிறுத்தத்தை நிராகரித்தது ரஷ்யா



அமெரிக்காவின் போர்நிறுத்த முன்மொழிவை ரஷ்யா நிராகரித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான ஆலோசகர் யூரி உஷாகொவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு ரஷ்யாவை ஒப்புக்கொள்ள வைப்பதற்கான முயற்சியாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வோல்ட்ஸ் நேற்றைய தினம் யூரி உஷாகோவுடன் நடத்திய தொலைபேசி கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கி ஏற்கனவே அமெரிக்காவின் இந்த திட்டத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளார்.

# அமெரிக்க பணயக் கைதியை விடுவிக்க ஹமாஸ் சம்மதம்



அமெரிக்க பணயக் கைதியை விடுவிக்கவும் இஸ்ரேலிய பணயக் கைதிகளில் உயிரிழந்த 4 பேரின் உடல்களை ஒப்படைக்கவும் ஹமாஸ் அமைப்பினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து பெப்ரவரி மாதம் வரை ஏழு வாரங்கள் இஸ்ரேல்-காஸா (ஹமாஸ்) இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில், தற்போது அடுத்த கட்ட போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தை கட்டாரில் நடைபெற்று வரும் நிலையில் ஹமாஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் இடையில் ஏழு வாரங்களுக்கு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்போது 25 உயிரோடுள்ள



பணயக் கைதிகளையும், 8 உயிரிழந்த பணயக் கைதிகளின் உடல்களை ஒப்படைக்கவும், இதற்கு இணையாக சுமார் 2 ஆயிரம் பலஸ்தீனர்களை இஸ்ரேல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என ஒப்பந்தம்செய்தனர்.


அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் கடைசி வாரம் வரை இஸ்ரேல்- ஹமாஸ் இடையே கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்றது. ஏழு வார ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், ஒப்பந்தம் நீட்டிக்கப்படவில்லை. இதனால் இஸ்ரேல் காஸாவிற்குச் செல்லும் எல்லையை மூடியுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை குறித்து உறுதியற்ற நிலையில் நீடித்து வரும் நிலையில் ஹமாஸ் தற்போது ஒரு பணயக்கைதி மற்றும் உயிரிழந்த 4 பணயக் கைதிகளின் உடல்களை ஒப்படைக்கச் சம்மதம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் இஸ்ரேல் இராணுவ வீரர் ஏடன் அலெக்சாண்டரை விடுவிப்பது தொடர்பாக எந்த அறிவிப்பையும் ஹமாஸ் வெளியிடவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# செயற்கை இதயம் பொருத்தி மருத்துவ சாதனை





உலகின் முதன்முறையாக முழுமையான செயற்கை இதயம் பொருத்தப்பட்டு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ள அவுஸ்திரேலிய நபர் ஒருவர் மருத்துவ வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

நியூ சவுத் வேல்ஸைச் சேர்ந்த 40 வயதுடைய குறித்த நோயாளி, அவுஸ்திரேலியாவில் இந்த முழுமையான செயற்கை இதயத்தைப் பெற்ற முதல் நபராக தானாக முன்வந்து சோதனைக்கு உட்படுத்திக்கொண்டார்.

அவருக்கு நவம்பர் 22ஆம் திகதி அந்தக் கருவி பொருத்தப்பட்டு பெப்ரவரியில் அதனுடன் வீடு திரும்பினார்.

இதேவேளை மார்ச் மாத தொடக்கத்தில் மாற்று அறுவை சிகிச்சைக்கு ஒரு நன்கொடையாளர் இதயம் கிடைத்து அறுவைச்சிகிச்சை இடம்பெற்று வீடு திரும்பியுள்ளார்.

அதேவேளை மார்ச் மாத தொடக்கத்தில் அவருக்கு நடைபெற்ற மாற்று இதய அறுவை சிகிச்சைக்கு முன்பாக, BiVACOR சாதனத்துடன் அந்த நோயாளி 100 நாட்களுக்கு மேல் உயிர் வாழ்ந்ததை அடுத்து இந்த சாதனை படைக்கப்பட்டது.

இந்த சாதனை செயல்முறையை சிட்னியின் செயிண்ட் வின்சென்ட் வைத்தியசாலையின் இருதய மற்றும் தொராசிக் அறுவை சிகிச்சை நிபுணர் பால் ஜான்ஸ் மேற்கொண்டார்.

இதுபோன்ற ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு அவுஸ்திரேலிய மருத்துவ மைல்கல்லில் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமைப்படுவதாக ஜான்ஸ் கூறினார்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் கண்காணிப்புக்கு தலைமை தாங்கிய செயிண்ட் வின்சென்ட்ஸில் உள்ள இருதயநோய் நிபுணர் பேராசிரியர் கிறிஸ் ஹேவர்ட் கூறுகையில்,

"இந்த செயற்கை இதயம், இதய செயலிழப்புக்கு சிகிச்சையளிக்கும் போக்கையே மாற்றும் என்பதோடு 10 ஆண்டுகளில், தானம் செய்யப்பட்ட இதயங்களுக்காக காத்திருக்கவோ அல்லது பெறவோ முடியாதவர்களுக்கு இது ஒரு விருப்பமாக இருக்கும்" என்று அவர் கூறினார்.

குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட் கோல்குஹவுனும் அதன் வெற்றியை "ஒரு சிறந்த தொழில்நுட்ப முன்னேற்றம்" என்று கூறியுள்ளார்.




# பிராந்திய நலனில் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்னின்று செயற்படும்: சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் டொக்டர் சனூஸ் காரியப்பர்

நூருல் ஹுதா உமர்



சாய்ந்தமருது பிராந்தியத்துக்குள், கடந்த காலங்களில் பள்ளிவாசல் நிர்வாகங்கள் செயற்பட்டதை அடிப்படையாக வைத்து காலத்துக்கு ஏற்றவாறு மாற்றங்களைச் செய்து தங்களது புதிய அணி பணியாற்றும் என கல்முனை மாநகர சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் டாக்டர் எம். எச்.சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களின் தனவந்தர்களால் பைத்துஸ் ஸக்காத் நிதியத்துக்கு வழங்கப்பட்ட சுமார் 73 லட்சம் ரூபாய்கள் பொறுமதியான உபகரணங்கள் மற்றும் பணங்களை 103 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு 2025.03.13 ஆம் திகதி பைத்துஸ் ஸக்காத் நிதியத்தின் தலைவர் அஷ்செய்க் ஐ.எல்.எம். ரெளபி (ஹிளிரி) தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே சனூஸ் காரியப்பர் மேற்படி கருத்துக்களை முன்வைத்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திகளுக்கு பொறுப்பாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் முயற்சியின் பயனாக பல்வேறு துறைகளையும் சார்ந்த 42 பேர் இடைக்கால சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். குறித்த அங்கத்தினர்களிடையே சமூக அடிப்படையில் புதிய நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றோம். எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புனித பணியை பிராந்திய மக்களின் பங்களிப்புடன் முன்கொண்டு செல்ல ஆயத்தமாகி வருகின்றோம்.

பல்வேறு சந்திப்புக்களை ஏற்படுத்தி தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு வருகின்றோம். அத்துடன் இனம்காணப்பட்ட பிரச்சினைகளை கையாள்வதற்கு பல குழுக்களையும் ஏற்படுத்தியுள்ளோம். அவைகளினூடாக முடிந்த அளவு மக்களின் பங்களிப்புடன் முன் கொண்டு செல்வோம் என்றும் தலைவர் டாக்டர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.

பைத்துஸ் ஸக்காத் நிதியத்துக்கு மேலும் நிதிகளை சேகரிக்கும் பொருட்டு சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் உப தலைவருமான எம்.எஸ். முபாறக் மற்றும் நஸீர் மார்கட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.எச். நஸீர் ஆகியோர் ஒருதொகை பணத்தை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் ஏ.எம் சலீம் (சர்கி), சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் செயலாளர் எந்திரி எம்.எம்.எம். முனாஸ், பள்ளிவாசலின் பொருளாளர் முஸ்தபா, மற்றும் பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்கள், பைத்துஸ் ஸக்காத் நிதியத்தின் செயலாளர் யூ.எல்.எம். ஹனிபா, பொருளாளர் யூ.எல்.எம். ஹனிபா, பணிப்பாளர் எம்.ஐ.எம். அஷ்ரப் உள்ளிட்டவர்களுடன் உதவிகளைப்பெற்ற பயனாளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.








சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் வழிகாட்டலில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தனலெட்சுமி முரசொலிமாறன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கங்கேஸ்வரி கமலநாதன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அமலதாஸ், பெண்கள் அபிவிருத்தி மன்றம் ஸ்தாபக தலைவி ருத் சந்திரிகா சுரேஸ், மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.அருள் பிரசாந்தன் எனப்பலர் கலந்து கொண்டனர். (படம்: பாறுக் ஷிஹான்)

## பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் மகளிர் தின நிகழ்வு

எச்.எம்.சியாஜ்

பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பு மற்றும் மாத்தறை மாவட்ட சிகரம் மலையக பெண்கள் சம்மேளனம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மகளிர் தின நிகழ்வு தெனியாய கொடபொல நகர மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்டனி ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்றது.

காணி, வீடு, கல்வி மற்றும் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதினூடாக மலையக பெண்களின் அபிவிருத்தியை மேம்படுத்துவோம். எனும் தொனிப் பொருளில் இவ் மகளிர் தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களைத் தேர்வு செய்ய முஸ்லிம் காங்கிரஸ் கலந்துரையாடல்!



எஸ்.சினீஸ்கான்

எதிர்வரும் உள்ளூட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் நகர சபைக்கு மு.கா சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம், பிரதேச கட்சி உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் முன்னாள் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். இதன்போது வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

# "கல்முனையில் சமய தீவிரவாதம்" எனும் குற்றச்சாட்டு தொடர்பில் மக்களுக்கான அறிவித்தல்

நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்

"கல்முனையில் சமய தீவிரவாதம்" எனும் குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனையின் பிரதான பள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலும், கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும், முஸ்லிம் சமூகமும், குறிப்பாக கல்முனை வாழ் சிவில் சமூகமும் இக்கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர் என தெரிவித்து கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை அறிக்கையொன்றின் ஊடாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

அந்த அறிக்கையில், அண்மையில் பாராளுமன்றத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரினாலும், பத்திரிக்கையாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளரினாலும் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக கல்முனையில் இஸ்லாமிய தீவிரவாதம் மேலோங்கி இருப்பதாகவும், அரசு இது விடயமாக கண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனையின் தாய்ப் பள்ளிவாசலான கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலும், கல்முனை வாழ் அனைத்து மக்களும் கவலையுற்றிருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பில் மிக அவதானமாகவும் இருக்கின்றோம். சமய தீவிரவாதம் தொடர்பாக இஸ்லாம் மார்க்கமும், முஸ்லிம் சமூகமும், குறிப்பாக கல்முனை வாழ் சிவில் சமூகமும் இக்கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருக்கின்றனர்.

எனவே மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு தொடர்பாக கல்முனை பிரிவிற்கான உதவி பொலிஸ் அத்தியட்சகரை கடந்த 06ஆம் திகதி அன்று சந்தித்து குறித்த விடயம் தொடர்பான பூரண விளக்கத்தினை எங்களுக்கு தருமாறும், குறித்த இஸ்லாமிய தீவிரவாதம் கல்முனையில் ஆதாரபூர்வமாக செயற்படுமாயின் அதனை முற்றிலும் இல்லாமலாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை பாதுகாப்பு பிரிவினர் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்றும், அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் எமது ஊர் பள்ளிவாசல்களும், மக்களும் வழங்க தயாராகவுள்ளோம் எனும் உறுதிப்பாட்டை எழுத்து மூலமும் அறியப்படுத்தி உள்ளதோடு இவ்விடயம் தொடர்பில் பொலிஸாரும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடலுக்காக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரை எமது ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அழைத்து இருப்பதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் அனைத்து மாகாண, மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கல்முனையின் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்றினையும் மிக விரைவில் ஏற்பாடு செய்து மேற்கூறப்பிட்ட விடயம் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும் கொழும்பிலுள்ள International Advocacy Institution ஒன்றின் துணையுடன் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான உண்மைத் தன்மைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரித்து அரசாங்கத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் முன்வைப்பதற்கான மேலதிக ஏற்பாடுகளையும் எமது நம்பிக்கையாளர் சபை முன்னெடுத்துவருகின்றது.

எனவே மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் எமதூரின் தாய்ப்பள்ளிவாசல் விரைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுடன் பொதுமக்களாகிய தாங்களும் இவ்விடயத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அன்பாய் வேண்டிக் கொள்கின்றோம்.

## சாய்ந்தமருதில் 103 குடும்பங்களுக்கு ஸகாத் உதவி

எம்.எஸ்.எம்.ஸாகிர்





சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பைத்துஸ் ஸகாத் நிதியத்தினால் இவ்வாண்டும் பைத்துஸ்ஸகாத் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை சாய்ந்தமருது பள்ளிவாசலில் இடம்பெற்றது.

பைத்துஸ்ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி ஐ.எல். எம்.ர.ஃ.பி (ஹிழ்ரி) யின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் எம். எச். சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், பைத்துஸ் ஸ காத் செயலாளர் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் யூ.எல்.எம். ஹனீபா, பொருளாளர் பிரதேச செயலக ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் யூ.எல்.எம். ஹனீபா, உப செயலாளர் எம்.சி.எம்.அன்வர், பைத்துஸ் ஸகாத் பணிப்பாளர் எம்.ஐ.எம்.அஷ்ரப், உட்பட உறுப்பினர்கள், சாய்ந்தமருது - மாளிகைக்காடு நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், பொருளாளர் ஏ.எல். எம்.முஸ்தபா, உப தலைவர் எம்.எஸ்.எம். முபாரக், உப பொருளாளர் எம்.ஐ. நஜீம் மற்றும் புதிய, பழைய நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பைத்துஸ் ஸகாத்தில் பணிபுரியும் ஏ.ஏ.சமட் உட்பட பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 103 பயனாளிகளுக்கு இதன்போது 73 இலட்சம் ரூபாய் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்துடன் சிறு கைத்தொழிலுக்காக 4 மாவு இடிக்கும் இயந்திரங்களும் 2 தையல் இயந்திரமும் கையளிக்கப்பட்டதுடன் அண்மையில் நெல் மூடைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன



கல்முனை மாநகரில் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் முத்துச் சப்ற பவனி பக்தி பூர்வமாகவும், கோலாகலமாகவும் இடம்பெற்றது. (படம்: ஏ.எல்.எம்.ஷினாஸ், எம்.எம்.ஜபீர்)

# ஆர்.ஜே. மீடியாவின் ஐந்து வருடப் பூர்த்தியும் மகுட விருது வழங்கல் விழாவும்















“முயற்சிக்கு என்றும் முதலிடம்” என்ற வாசகத்தை மையமாகக் கொண்டு பல சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்கி வரும் ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஐந்து வருடப் பூர்த்தி மற்றும் மகுட விருது வழங்கல் விழா, ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளர் ஏ.எம். இன்சாபின் தலைமையில் கொழும்பு டவர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர். எம்.எம். பாஸில் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் யூ.எல். யாகூப், சமூகப் பணி மற்றும் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவன இயக்குனர் வி. ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், சிரேஷ்ட உளவியல் ஆலோசகர் அஸ்மியாஸ் ஷஹீத், தமிழன் பத்திரிகை பிரதம ஆசிரியர் சிவராஜா ராமசாமி, கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக்காட்சி பொது முகாமையாளர் சியாஉல் ஹஸன், தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர் டாக்டர். ஸ்ரீ பிரேந்ரன், வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலி முகாமையாளர் எம்.எஸ். எம். இர்பான், கெப்பிட்டல் வானொலி சிரேஷ்ட முகாமையாளர் ஏ.எல். ஜபீர், சிரேஷ்ட ஒளிபரப்பாளர் இர்ஷாத் எ. காதர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவி புர்கான் பீ இப்திகார், சிரேஷ்ட ஊடகவியலாளரான ஸமீஹா சபீர் மற்றும் ராம் குணா அழகுசாதன மையத்தின் இயக்குனரான குணரத்னம் ஹரிசாந்த் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில், ஊடகம், கல்வி, கலை, இலக்கியம், சுகாதாரம், ஆன்மீகம், சமூக சேவை, சாதனையாளர், இளம் தொழில் முயற்சியாளர் மற்றும் அரச நிர்வாகத் துறை என்ற பல்துறைகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், ஆர்.ஜே.மீடியாவின் ஊடகப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, ஆர்.ஜே. மீடியாவின் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு, ஆர்.ஜே. மீடியா உறுப்பினர்கள் கௌரவிப்பு அதிதிகள் கௌரவிப்பு என நிகழ்வு இடம்பெற்றதோடு நிகழ்வில், நூற்றுக்கானவர்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் சர்வதேச மகளிர் தின நிகழ்வும் சட்டத்தரணி ஆரிகா ஷாரிக் காரியப்பர் கௌரவிப்பும்













சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், இணையத்தள பாதிப்பு மற்றும் போதைப் பொருளினால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு செயலர்வு (08) சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதில் சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜ.ஃபர், சமுர்த்தி வங்கிச் சங்க சமுதாய அடிப்படை அமைப்பு விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எஸ்.ஷாமிலா உள்ளிட்ட சமுர்த்தி சமுதாய அமைப்பின் தலைவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வரலாற்றில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முதல் பெண் தலைவியாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணியும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஆரிகா ஷாரிக் காரியப்பருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வின் வளவாளர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா ஷாரிக் காரியப்பர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுட்பாட்டுச் சபையின் வட, கிழக்கு இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம்.றஸாட், உளவளத் துணை உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.சியாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசு சேவையில் 30 வருடம் சேவையாற்றி ஓய்வுபெற்ற
# சமுர்த்தி சாலிஹ்! ஒரு பார்வை...

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



இலங்கை சமுர்த்தி திணைக்களத்தில் நீண்ட காலம் சேவையாற்றிய சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் என்ற மகுடத்திற்கு சொந்தக்காரரான அப்துல் றகீம் முஹம்மது சாலிஹ் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பணியில் சுமார் 30 ஆண்டுகள் சேவையாற்றி விட்டு கடந்த 12ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்கின் முகவெற்றிலையாக திகழும் கல்முனை மாநகரத்தின் செல்வச் செழிப்பு மிக்கதும், சிறந்த கல்விப் புலமை மிக்க மருதமுனை கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இவர் மருதமுனை அரச கடமை சேவை பரப்பில் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் எனும் மகுடத்துக்குரியவர் சாலிஹ் என்பதுடன் சமுர்த்தி சாலிஹ் எனும் ஆளுமை நாமம் அவருக்கு கிடைத்த கிரீடமாகும்.






மருதமுனையில் புகழ்பூத்த சிறப்பு மிக்க மூத்தவர் பரம்பரையின் இரண்டாம் தலைமுறையில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து மறைந்த அப்துல் றகீம் மைமூனா தம்பதியினருக்கு ஐந்தாவது பிள்ளையாக 1965.03.12ல் பிறந்த முஹம்மது சாலிஹ் (12.03.2025) 60 வயதை கடந்து செல்லும் ஒரு சிறந்த ஆளுமை மிக்க நேர்மையான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள நிருவாகியாவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியிலும் பயின்று கணித விஞ்ஞான பிரிவில் சிறப்பாக சித்தியடைந்து இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்து பின்னர் வடகிழக்கில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இடம்பெயர் மாணவனாக இணைந்து விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றார். பின்னர் சமுர்த்தி கணக்கு நடவடிக்கை தொடர்பில் கொழும்பு தொழில்நுட்ப கல்லூரியில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் இலங்கை சமாதான கற்கை நிறுவத்தினூடாக சாம்பியாவின் எலைன்ஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் மனித வள மேம்பாட்டுத் துறையில் தனது வியாபார நிர்வாக முதுமானி பட்டப்பின் படிப்பினையும் பூர்த்தி செய்தார்.

சமுர்த்தி முகாமையாளர் எனும் பதவிக்கு 1994ம் ஆண்டு ஆகஸ்ட் 09ம் திகதி நியமிக்கப்பட்டு இன்றுடன் 30 வருடங்கள் முத்து விழா கண்ட மனநிறைவுடன் ஓய்வு நிலைக்கு செல்கிறார். தனது அரச சேவையில் அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகங்களில் கடமையாற்றினாலும், 25 வருடங்கள் தான் பிறந்த கல்முனைப் பிரதேச மக்களுக்கு சேவையாற்ற கிடைத்தமையை தான் பெற்ற பெரும் பேறென நினைக்கிறார். இக்காலத்தில் இப்பிரதேச வருமானம் குறைந்த மக்களுக்கென சொந்தக் காணியில் சொந்தமாக சமுர்த்தி வங்கிகள் இரண்டினை கல்முனைக்குடி, மருதமுனையிலும் அமைத்துக் கொடுக்க முன்னின்று உழைத்துள்ளார். அதே போன்று நற்பிட்டிமுனை வருமானம் குறைந்த மக்களின் நன்மை கருதி அவர்களுக்கான தனியான சமுர்த்தி வங்கி உருவாக்கத்தில் தனது மேலதிகாரிகளுடன் கைகோர்த்து பெரும்பங்காற்றியுள்ளதுடன் அவ்வங்கியின் முதலாவது முகாமையாலராகவும் கடமையாற்றி சிறப்பாக செயலாற்றி உள்ளார்.

மருதமுனையை சேர்ந்த அப்துல் றஹீம் முஹம்மது சாலிஹ் அவர்கள் மார்ச் மாதம் 11ஆம் திகதி தனது 30 வருட கால அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு தான் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் தனக்கு மேல் பணி செய்த நிர்வாக அதிகாரிகளையும் ஒன்றிணைத்து ஏற்பாடு செய்த மகிழ்ச்சி விருந்தும் விடைதரு விழாவும் அண்மையில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஏ. ஆர். எம். சாலிஹ் அவர்களின் அரச சேவையையும் சமூகப் பணியையும் மேற்கோள் காட்டி பலரும் உரையாற்றினார்கள். இதனை அடுத்து ஏ.ஆர்.எம். சாலிஹ் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வின் போது ஏ.ஆர்.எம். சாலிஹ் அவர்களின் நினைவு குறிப்புகள், வாழ்க்கை வரலாறு பற்றிய "நினைவுச் சுவடுகள்" எனும் புத்தகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர். வி ஜெகதீசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஸீர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் நிந்தவூர் பிரதேச செயலாளருமான சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப், சமுர்த்தி திணைக்களத்தின் தலைமை அலுவலக பிரதம கணக்காளர் வை.ஹபீபுல்லா, முன்னாள் மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார், அம்பாறை மாவட்ட சமூர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் டி.எம். குணவர்த்தன, டாக்டர்.ஏ.எல்.எம்.மிஹ்லார், ஓய்வுபெற்ற சிரேஷ்ட சமூர்த்தி முகாமையாளர் எம்.ஏ. இமாமுத்தீன், அஷ்ரப் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி குமுதினி, ஓய்வுபெற்ற மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.ஜெ. ஹசீப், ஓய்வு பெற்ற சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் சலீம், சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் எம்.ஐ. ஹுசைன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் பஷீர் அப்துல் கையூம் உட்பட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர், நிர்வாக அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், குடும்ப உறவினர்கள், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். ஊடகத் துறையில் பணியாற்றும் நண்பர்களுடன் மிகவும் நட்புடன் பழகும் இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய பிராத்திக்கின்றோம்.

SPORTS லீடர்
sportsml77@gmail.com

## நியூசிலாந்திற்கு எதிரான முதலாவது T20 போட்டியில்
# இலங்கை அணி வெற்றி





நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான முதலாவது T20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை மகளிர் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் அணி 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நியூசிலாந்து மகளிர் அணி சார்பாக எம்மா மெக்லியோட் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கை மகளிர் அணியின் பந்துவீச்சில் மல்கி மாதரா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பின்னர், 102 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை மகளிர் அணி, சமரி அத்தபத்து ஆட்டமிழக்காமல் பெற்ற 64 ஓட்டங்களின் உதவியுடன் 14.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் ஊடாக 3 போட்டிகளைக் கொண்ட T20 தொடரில் இலங்கை மகளிர் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளது.

# இலங்கை வரும் பங்களாதேஷ் இளம் அணி



பங்களாதேஷின் 19 வயதின் கீழ்ப்பட்ட கிரிக்கெட் அணியானது ஏப்ரல் - மே மாத இடைவெளிகளில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இலங்கை வரும் பங்களாதேஷின் இளம் வயது கிரிக்கெட் வீரர்கள் இலங்கை 19 வயதின் கீழ் கிரிக்கெட் அணியுடன் மொத்தம் ஆறு போட்டிகள் கொண்ட இளையோர் ஒருநாள் தொடரில் பங்கேற்கவிருக்கின்றனர்.

அத்துடன் ஒருநாள் தொடருக்கு மேலதிகமாக பயிற்சிப் போட்டியொன்றும் பங்களாதேஷ் 19 வயதின் கீழ் கிரிக்கெட் அணிக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை ஒருநாள் தொடரின் போட்டிகள் அனைத்தும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டி அட்டவணை

ஏப்ரல் 24 - பயிற்சிப் போட்டி

ஏப்ரல் 26 - முதல் ஒருநாள் போட்டி

ஏப்ரல் 28 - இரண்டாவது ஒருநாள் போட்டி

மே 01 - மூன்றாவது ஒருநாள் போட்டி

மே 03 - நான்காவது ஒருநாள் போட்டி

மே 06 - ஐந்தாவது ஒருநாள் போட்டி

மே 08 - ஆறாவது ஒருநாள் போட்டி



பி.ஃ.பா உலகக் கிண்ணத்தின் நூற்றாண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் 2030 உலகக் கிண்ண தொடரில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை 64 ஆக அதிகரிக்கும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த மார்ச் 5 ஆம் திகதி இடம்பெற்ற பி.ஃ.பா கௌன்சில் கூட்டத்தில் 2030 இல் நடைபெறும் நூற்றாண்டு பி.ஃ.பா உலகக் கிண்ணத்தில் 64 அணிகளை பங்கேற்கச் செய்யும் பரிந்துரை முன்வைக்கப்பட்டதாக பி.ஃ.பா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# டெல்லி அணியின் தலைவராக அக்ஷர் படேல்



18 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடங்க இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் டெல்லி கேப்பிடல்ஸ் அணி மட்டுமே இன்னும் அணி தலைவரை அறிவிக்காமல் இருந்தது.

சென்னை சூப்பர் கிங்ஸ் (ருதுராஜ் கெய்க்வாட்), மும்பை இந்தியன்ஸ் (ஹர்திக் பாண்ட்யா) சன்ரைசர்ஸ் ஐதராபாத் (கம்மின்ஸ்), குஜராத் டைட்டன்ஸ் (சுப்மன்கில்), ராஜஸ்தான் ராயல்ஸ் (சஞ்சு சாம்சன்) ஆகிய 5 அணிகளின் அணி தலைவரைகளில் மாற்றம் இல்லை.

நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு ரகானேவும் (கடந்த சீசன் ஷ்ரேயாஸ் ஐயர்), ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு ரஜத் படிதாரும் (டுபெலிஸ்), லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிக்கு ரிஷப்பண்ட்டும் (கே.எல்.ராகுல்), பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு ஷ்ரேயாஸ் ஐயரும் (ஷிகர் தவான்) புதிய அணி தலைவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

டெல்லி கேப்பிடல்ஸ் அணியில் கே.எல்.ராகுல், அக்ஷர் படேல், தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த டுபெலிசிஸ் ஆகிய 3 பேரின் பெயர்கள் அணிதலைவர் தேர்வில் இருந்தது. இதில் கே.எல்.ராகுலை நியமிக்க டெல்லி அணி நிர்வாகம் விரும்பியது. ஆனால் அவர் அதை நிராகரித்தார். மேலும் அவர் தொடக்கத்தில் சில போட்டிகளை தனிப்பட்ட காரணங்களுக்காக தவற விடுகிறார்.

இந்நிலையில் அக்ஷர் படேலை டெல்லி அணியின் அணி தலைவரை அணியின் நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அக்ஷர் படேல் 2019 ஆம் ஆண்டில் இருந்து டெல்லி கேப்பிடல்ஸ் அணியில் விளையாடி வருகிறார். அவர் 18 ரூபா கோடிக்கு தக்க வைக்கப்பட்டுள்ளார். அக்ஷர் படேல் ஐ.பி.எல்.லில் 150 ஆட்டத்தில் விளையாடி 1,653 ஓட்டங்களை எடுத்துள்ளார். 123 விக்கெட் வீழ்த்தி உள்ளார். கடந்த சீசனில் டெல்லி அணிக்கு ரிஷப் பண்ட் அணி தலைவராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது